# கடல் அழகுக்கு சிறு கவிதை

முத்துச் சுரங்கத்தை உள்ளிருத்தி - நீ
மூச்சடக்கித் தேட வைத்திடுவாய்
சத்தாக உப்பினைச் சேர்த்து வைத்து – நீ
சகல செயலுக்கும் வித்திடுவாய்!
எத்தனை எத்தனை மீன் வகைகள் - நீ
எடுத்துக் கொடுக்கிறாய் தேன் சுவையாய்.
மொத்தமாய்ப் பலரது வாழ்க்கையில் – நீ
முன்னேற்றக் கப்பலை செழிக்க வைப்பாய்.
அன்னைக் கடல்மடித் தவழ்கையிலே - பலர்
ஆனந்த எல்லைக்கே செல்லுகிறார்,
கண்ணை இழுத்திடும் அலை வரிசை – அதில்
காட்சிகள் சேர்த்திடும் படகு வகை.
பண்ணை இசைத்திடும் அலைகள் ஒலி – காதில்
பற்பல இசைமுறை சொல்லித்தரும்
உண்மையில் எந்த பேர் வல்லுநரும் - கடல்
பாடும் இசைத்திறன் சொல்வதில்லை.
வானத்துச் சூரியன் உன் நீரைத்தான் – வந்து
வாங்கியே மேகத்தைப் பொழிய வைத்தான்.
கானத்து மழைத்துளி உன்னை நோக்கி - பல
ஆறாகிப் பாய்வதில் மகிழ்ச்சி வெள்ளம்.
ஆனாலும் அவைதரும் குப்பை கூளம் - பல
அற்புத உயிர்களின் இறுதிக் கூடம்
மனதிலே ஏற்றுமே மக்கள் உள்ளம் – இனி
மகிழ்வுடன் காக்கட்டும் கடலை எல்லாம்!

**கவிப்பேரொளி. நீரை. அத்திப்பூ**
**சே.அப்துல் லத்தீப்**
**அஞ்சல் பயிற்சி மைய மேனாள் உதவி இயக்குர்**
**பள்ளிவாசல் தெரு,**
**நீர்முளை அஞ்சல் 614711**
**திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்**
**9444446350, kaviathippu@yahoo.co.in**